**AKHBAR : MALAYSIA NANBAN**

**TARIKH : 24.02.2019**

**M/S : 3**

# அரசாங்கத்தில் இந்தியர்களுக்கான வேலை வாய்ப்புகள்

# பொதுச் சேவைத்துறையில் சிறப்பு செயற்குழு

## மித்ரா அறிவிப்பு



டான்ஸ்ரீ ஜைனால்

கோலாலம்பூர், பிப். 24- மலேசிய இந்தியர்களிடையே அரசாங்கத்துறை வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நம்பிக்கைக் கூட்டணியின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் சிறப்பு செயற்குழுவை அமைப்பதற்கு பொதுச்சேவைத் துறையின் தலைமை ஆணையர் டான்ஸ்ரீ ஜைனால் ரஹீம் சேமான் ஒப்புதல் வழங்கியிருக்கிறார்.



. பொதுச் சேவைத்துறை உயர் அதிகாரிகளுடன் மித்ரா சந்திப்பு

## ★ அரசாங்கத் துறையில் இந்தியர்களுக்கு 7% வேலை வாய்ப்புகள்

பொதுச் சேவைத்துறைக்கும் மித்ரா அதிகாரிகளுக்கும் இடையே கடந்த வாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு சந்திப்புக் கூட்டத்தின் போது இதற்கான முடிவு காணப்பட்டதாக மித்ரா இயக்குநர் லெட்சுமணன் சண்முகம் கூறினார்.

நம்பிக்கைக் கூட்டணி அரசாங்கத்தின் வாக்குறுதிகளில் ஒன்றான இந்தியர்களின் அரசாங்க வேலை வாய்ப்பினை குறைந்த பட்சம் 7 விழுக்காட்டிற்கு உயர்த்த வேண்டும் என்பதை நனவாக்கும் நடவடிக்கையாக மித்ராவின் அதிகாரிகள் பொதுச் சேவைத் துறையின் உயர் அதிகாரிகளுடன் அதிகாரப்பூர்வ சந்திப்பை நடத்தியுள்ளனர்.

இதன் பலனாக விரைவில் இந்தியர்களின் அரசாங்க வேலைகளுக்கான எண்ணிக்கையை உயர்த்துவதற்கு சிறப்பு செயற்குழுவை அமைக்கும் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், விரைவில் சந்திப்பை நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமை ஆணையர் தெரிவித்திருப்பதாக லெட்சுமணன் கூறினார்.



லெட்சுமணன்

பொதுச் சேவைத்துறை வேலைகளுக்காக விண்ணப்பம் செய்வதில் இந்தியர்களிடையே காணப்படும் பலவீனங்களும் இதில் விவாதிக்கப்பட்டன.

விண்ணப்பதாரர்கள் முழுமையான தகவல்களை தருவதில்லை. மேலும், அவர்கள் நேரடி தேர்விற்கும் வராமல் இருப்பது, கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு

## ★ விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## ★ அரசு வேலைகளுக்கு விண்ணப்பம் செய்வதில் நிலவும் குறைபாடுகள்

விண்ணப்பம் செய்ய தவறுவது போன்ற சிக்கல்கள் பற்றி இச்சந்திப்பில் பேசப்பட்டது.

மித்ராவைப் பொறுத்த வரையில், பொதுச்சேவை துறையில் தகுதி வாய்ந்த அதிகமான இந்தியர்களுக்கு வாய்ப்புகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொண்டு வருகிறது.

மலேசிய இந்தியர்களிடையே பொது சேவைத்துறை தொடர்பான விழிப்புணர்வு, நேர்முகத் தேர்விற்கான நடைமுறைகள், மின்னியல் தகுதி தேர்விற்கான பயிற்சிகள் போன்ற நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என லெட்சுமணன் சண்முகம் தெரிவித்தார்.

பிரதமர் துறையின் கீழ் செயல்பட்டு வரும் மித்ரா, அரசாங்கத்துறைகளில் மலேசிய இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சிகளை இந்த சிறப்பு நடவடிக்கைக் குழுவினர் வழி மேற்கொள்ள முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

FROM,

PERUJI PERUMAL

SUB-EDITOR

MALAYSIA NANBAN.0166241925.

FOR

YANG BERBAHAGIA

TAN SRI ZAINAL RAHIM

CHAIRMAN OF PUBLIC SERVICE COMMISSION

KUALA LUMPUR, FEB 24.

The chairman of the Public Service Commission has agreed to set up an special committee to promote Indian participation in public sector. This is inline with pakatan Harapan pledge to increase job opportunities for Malaysian Indians in the government sector. An special dialogue session took place between Mitra and SPA last week , says Mitra director Letchumanan shanmugam. To raise Indian participation at least to 7 percent in one of the pledges made by the Pakatan Harapan. This target should be retained . In order to make this 7 percent vision to materialize Mitra authorities had an official meet the session with the top level officers of SPA. As a result the chairman of Public Service Commission has given green light to the proposal to set up an special committee. According to Letchuman , follow up action will follow soon. Various matters were discussed in the recent meeting. Some of the weaknesses of the applicants were also mentioned . At times the applicants fail to provide full information.Some failed to turn up for interview. The applications are made not delivered according to academic applications . These are things deliberated at the meeting. Mitra will focus on creating awareness and enlighten the Indian applications. Mitra is under the jurisdiction of PM department. Mitra director Letchumanan is optimistic that the proposed Special Committee could play an crucial role in improving the Indian participation in Civil Service.